தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)

ஆணை எண்.78/மா/2021
நாள். 29.12.2021

திரு. M. மணி,
கோயம்புத்தூர் – முறையீட்டு மனுதாரர்

1) ஆணையர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி. – எதிர்மனுதாரர்கள்
2) உதவி ஆணையர்,
கோயம்புத்தூர் தெற்கு,
கோயம்புத்தூர் மாநகராட்சி

கோயம்புத்தூர் மாநகராட்சி, குறிச்சி, போத்தனூர் ஸ்ரீராம் நகரை சேர்ந்த திரு M.மணி என்பவரின் 07.08.2021 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 09.08.2021–ல் பெறப்பட்டு 78/மா/2021 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரது மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

ஆணை

கோயம்புத்தூர் மாநகராட்சி, குறிச்சி, போத்தனூர் ஸ்ரீராம் நகரை சேர்ந்த திரு M.மணி என்பவர் தன்னுடைய 07.08.2021 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணுமாறு புகார்களை தெரிவித்துள்ளார்.

"An encroachment around 360 Sq.ft(32 ft.width and 10 ft long in Corporation Road) in the residential area ( in Sriramnagar, Chettypalayam Road, Podanur, Coimbatore, under the jurisdiction of Coimbatore South) by one Mr.Fazuludin (Door No.4/83, Sriramnagar, Chettypalayam road, Podanur) in front of his house, by erecting pucka iron poles and laying metallic (synthetic)roof with electric fittings, for running a two wheeler Automobile mechanic workshop, was noticed by me. The encroachment was purely for commercial purpose for the personal benefit of one individual by occupying the public road, depriving the rights of general public for common

use, without paying any tax etc. The approximate income per month from the encroached area is around Rs.60,000/- per month as daily 25-30 two wheelers are being attended daily. As the encroachment was against the interest of general public and causing traffic congestion to general public particularly during school days, this matter was brought to the notice of Corporation through petition to CM Cell vide Number 2019/1036313/DV ON 02.10.2019. In response it was replied by the Assistant Commissioner, Coimbatore South, that the encroachment was not disturbing the public. On my further pursuation through CM Cell the Corporation was kind enough to issue notice to the individual under section 258 of Corporation Act 1981 for the removal of the structure giving time upto 24.08.2020. It seemed that the Corporation had finally admitted that the structure was really an encroachment. I thought now, Corporation had finally taken a strict decision and the structure would be removed at least in August, 2020. I was also under the impression that Corporation would take follow up action once they issue the notice and take strict action as mentioned in the notice to remove the structure, if no removal was effected by the individual. However, no action was noticed even after the period of four months.

Having disappointed, I made an another petition to CM Cell and in response it had been replied stating that the work of ' நகரளவு பணி' is under progress in Sriram Nagar area and after the completion of said work, action would be taken with due intimation/notice. Already five months elapsed from the date of the letter and no 'நகரளவு பணி' is seen in this area as I am also residing in the same area. When I asked to intimate the approximate date of 'நகரளவு பணி' through RTI Act, it was replied that this information is not within the ambit of RTI, hence no intimation is possible. Already five months are over from the date of reply of Corporation and no remedial measures are seen.

Thus, it is unable to understand why there is no action for the removal of encroachment when it is established beyond doubt that Corporation Road is used for the commercial use by one individual for his personal income/gains inspite of petitions to CM Cell. First the Corporation denied, saying, no disturbance to public. Subsequently, it accepted the existence of encroachment and issued notice under the relevant Act. When the conditions of the notice were not honored by the individual, Corporation had not taken any action as mentioned in the notice. When it was further reminded by me, now the Corporation had come up with a reason stating 'நகரளவு பணி'

Already for more than 15 years the individual is enjoying the encroached area without paying any rent or tax for its commercial usage and for more than two years I am pursuing for its redemption. Therefore, I request that this matter may kindly be examined and suitable action taken immediately. Let the Road be made available to general public, the tax payers for free usage. If it is to be done only after "நகரளவு பணி", it may kindly be intimated how much time this will take. The delay on the part of

administration should not encourage other residents to follow suit. Further, it would be of great complication and bring pressure from various sources if the encumbrance is not removed now itself.

Having seen a notification in the Dailies this petition is sent with a great hope that suitable action will be taken to free the encroached area and make it possible for the use of general public."

2) முறையீட்டு மனுதாரர் மற்றும் ஆணையரின் பிரதிநிதியாக உதவி ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி ஆகியோரை 06.12.2021 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 25.11.2021 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3) மனுதாரர் தனது 01.12.2021 நாளிட்ட கடிதத்தில் "தான் ஒரு சீனியர் சிடிஸின், சென்ற வருடம் கோவிட் தாக்கப்பட்டு இன்னும் மீளமுடியாத நிலையில் உள்ளவன். மேலும் தற்போதைய கடும் மழை மற்றும் நெடுந்தூரம் என்னை பயணிக்க முடியாமல் தடுக்கின்றன. இருப்பினும் சில நேரங்களில் கண் முன்னால் நடக்கும் சில தவறுகள் என்னை மிகவும் உறுத்தும்பட்சத்தில் அவைகளை சம்மந்தப்பட்ட நிர்வாகத்தினருக்கு தெரிவிப்பதும், அதற்குண்டான பதில்கள் மேம்போக்காக எனக்கு தோன்றும்பட்சத்தில், அடுத்த மேல் லெவெலிற்கு கொண்டு போவதை தவிர்க்க முடியாதவனுமாக இருக்கிறேன். இதைத்தவிர இதில் என் சுயலாபம் என்று ஒன்றும் இல்லை. மேல்குறிப்பிட்ட என் மனுவும் அதுபோலத்தான். என் மனுவில் அனைத்து விவரங்களும் தெளிவாக குறிப்பிட்டுள்ளேன். அது அப்படியே self explanatory. நிர்வாகம் கடந்த 15 ஆண்டுகளாக தனி மனிதன் ஒருவரால் ஆட்டோ மொபைல் ரிப்பேர் ஷாப் நடத்தி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள அரசுக்கும் பொது மக்களுக்கும் சொந்தமான, மாநகராட்சி சாலையை, சென்ற வருடம் தான் ஆக்கிரமிப்பு என்று ஒத்துக்கொண்டிருப்பதை எப்போது அகற்றப்போகின்றது என்பதை தெரிவித்து, அதன்படி அகற்றினால் போதும் என்று குறிப்பிட்டு, இது தொடர்பான புகைப்பட நகலும் அனுப்பியுள்ளார்.

மேற்படி நகராட்சி சாலையில் தற்போது மேலும் சில ஆக்கிரமிப்புகள் முளைத்து கொண்டிருக்கின்றன. எனவே உடனடியாக நிர்வாகத்தின் நடவடிக்கை, ஒரு சிறப்பான பலனளிக்கும் என்பதே என்வேண்டுதல். என்னால் நேரில் வரமுடியாத மேற்சொன்ன இயலாமையை ஏற்றும், என்னுடைய பொதுநல உணர்வுகளை கருத்தில் கொண்டும், தயவுகூர்ந்து, நிர்வாகத்தினரை இம்மனுவிற்கு ஏற்ற விரைவான நடவடிக்கையை எடுக்க ஆவன செய்யுமாறு மிக பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

4) கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டல உதவி செயற்பொறியாளர் (திட்டம்) அவர்கள் தனது 02.12.2021 நாளிட்ட மின்னஞ்சலில் தான் 06.12.2021 அன்றைய விசாரணையில் கலந்து கொள்ள இயலாததால் 08.12.2021 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்.

"கோயம்புத்தூர் மாவட்டம், போத்தனூர் ஸ்ரீராம் நகர் செட்டிப்பாளையம் ரோடு குடியிருப்புப் பகுதியில் தனியார் ஒருவர் மாநகராட்சி இடத்தை ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ள இரு சக்கர வாகன பழுதுபார்க்கும் நிலையம் அமைந்துள்ள ஆக்கிரமிப்பை அகற்றிட ஏற்கனவே அறிவிப்பு (Notice) வழங்கப்பட்டுள்ளது. எனவே, தற்போது மேற்கண்ட இடத்தை அளந்து, மாநகராட்சியால் 15 நாள் காலக்கெடு அளித்து மறு அறிவிப்பு (Notice) வழங்கப்படும் எனவும், மேலும் இதே போன்று அப்பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களுக்கு

அறிவிப்பு (Notice) வழங்கி மேல் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

5) முறையீட்டு மனுதாரரின் மனு, அவரது 01.12.2021 நாளிட்ட கடிதம் மற்றும் அவர் அனுப்பிய புகைப்பட நகல் மற்றும் கோவை மாநகராட்சி தெற்கு மண்டல உதவி செயற்பொறியாளர் (திட்டம்) அவர்களின் வாக்குமூலம் ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

இந்நேர்வில் மனுதாரர் சுட்டிக்காட்டிய ஆக்கிரமிப்பினை மாநகராட்சியால் அகற்றிட அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளதாக உதவிசெயற்பொறியாளர் 08.12.2021 அன்றைய விசாரணையின்போது தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். மாநகராட்சியால் 15 நாள் காலக்கெடு அளித்து மறு அறிவிப்பு வழங்கப்படும் என்றும் மேலும் இதுபோன்று அப்பகுதியில் மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களுக்கு அறிவிப்பு (Notice)வழங்கி மேல்நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உதவி செயற்பொறியாளர் தெரிவித்திருப்பதை தற்பொழுது ஏற்க இயலாது. ஏனென்றால் மனுதாரர் இது தொடர்பாக பல ஆண்டுகளாக போராடிக்கொண்டு வந்துள்ளார். மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் தாக்கல் செய்துள்ள முறையீட்டு மனுவிற்குப்பின்பு கூட துரிதகதியில் உரிய நடவடிக்கையினை மாநகராட்சி அலுவலர்கள் எடுக்கத்தவறியுள்ளனர். ஆக்கிரமிப்பாளர்களுக்கு முறையான சட்டப்படியான அறிவிப்பை முதலிலேயே கொடுத்து இருந்தால் இந்த பிரச்சினை வந்திருக்காது.

மேலும் இதுபோன்று கோயம்புத்தூர் மாநகராட்சிக்குச் சொந்தமான ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பகுதிகளை கண்டறிய ஒரு குழு அமைத்து மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து மண்டலங்களிலும் உள்ள ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடங்களை கண்டறிந்து ஆக்கிரமிப்புகளை அகற்ற உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்தி வேறு ஒரு கோப்பில் இம்முறைமன்ற நடுவத்தினால் ஆணையிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

முறையீட்டு மனுதாரர் பலமுறை இந்த ஆக்கிரமிப்பு தொடர்பாக கோயம்புத்தூர் மாநகராட்சியிடம் முறையிட்டுள்ளார். உரிய நடவடிக்கை எடுக்கப்படாததால் பொதுமக்களுக்கு சிரமமும் நிர்வாகத்தின் மீது அதிருப்தியும் ஏற்படக்காரணமாக அமைந்துள்ளது. இதுபோன்ற நேர்வுகளில் மாநகராட்சி அலுவலர்கள் மெத்தனமாக செயல்படாமல் விழிப்புடன் பணியாற்றவேண்டும் என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. எனவே மனுதாரர் பல ஆண்டுகளாக போராடியும் நடவடிக்கை எடுக்காமல் மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தை நாடியபின்னும் மெத்தனமாக செயல்பட்ட, சம்மந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் மீது அரசு விதிகளின்படி துறைரீதியான உரிய ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளும்படி கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

The Commissioner of Coimbatore Corporation is instructed to remove the automobile workshop encroachment forthwith and restore to the Corporation's control and custody. No action has been taken after the issue of notice in 2020 for 2 years. The field officials of the Zone responsible should be charge sheeted as per the standard procedure and severe punishment imposed as a mark of moral fear to be inculcated in the minds of all such field officials against collusion, connivance and complicity at the criminal offence of encroachment on public properties.

The Director of Municipal Administration is requested to constitute a Committee in Coimbatore Corporation to identify all encroachments on Corporation lands and OSR

categories within`` the Corporation limits and reclaim the lands under encroachment back to the Corporation in a time bound manner.

6) 2021 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 29–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
1) திரு M.மணி,
எண்.2, ஸ்ரீராம் நகர்,
செட்டிபாளையம் சாலை,
போத்தனூர், குறிச்சி,
கோயம்புத்தூர் – 641 023.

2) ஆணையர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்.

3) உதவி ஆணையர்,
கோயம்புத்தூர் தெற்கு,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

5) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர்(Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028. (பெயரிட்ட உறையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்